
# ஸ்ரீ ஆளரி அமுதம்

(இயற்றியது ஸ்ரீவில்லிபுத்தூர் கோவிந்தகிருஷ்ணன் அழகர்)



ஸ்ரீ யோக நரசிம்மர் சோளிங்கர்

October 2006

ஓம்

# ஸ்ரீ ஆளரி அமுதம்

(இயற்றியது : ஸ்ரீவில்லிபுத்தூர் கோவிந்தகிருஷ்ணன் அழகர்)

## தோற்றுவாய்

**நானிலத்தே சிறந்த கோபுரம் நம்பெருமா ளுக்கு எழுப்பிய,**
**நற்றவ முனி முக்கூர டியில் நாற்பத்தைந்தாம் பட்டமேற்று,**
**அவ்யய ஆண்டு அரிய கார்திகை உத்திரட்டாதியில் அரங்கநகரில்,**
**ஆயிரம் பிறைகாணும் அழகியசிங்கர் அடிகளுக் கர்ப்பணம்.**

### இறை வணக்கம்

1. அவனியின் அவலங்கள் அழிக்க அந்தமில் ஆழியான்,
அருட் கொண்டு ஏற்ற அவதாரங்கள் பத்துள்,
அந்தியில் இரணியன் உந்தி பிளந்தானைப் பாடி ஏத்த,
அருள் மாரி ஆண்டாள் அடி பணிந்துய்வனே.

2. ப்ரணவமே திருமேனியாய் ப்ரபஞ்சமெலாம் உறைந்து,
பிழையாத பக்தன் பிரகலாதனுக்கு அருள,
நானிலமும் நடுங்க நச்சராவணைத் துயிலகற்றி,
நட்ட தூண் பிளந்துதித்த நாரசிம்ஹனைப் பணிவனே.

## பாகவதம் தோற்றம்

3. நல்லோர்கள் இணைந்த சபையில் நைமி சாரண்யத்தில்,
நற்றவ யோகியராம் ஸுத மகரிஷி என்பார்,
வேதங்கள் முறை செய்த வியாசரின் மகன்,
விரித்துரைத்த பாகவதத்தை விளம்பலுற்றார்.

4. ஆய புராணங்கள் ஆறு மூன்றுள் சிறந்ததாம்,
அச்சுதன் புகழிசைக்கும் அரிய பாகவதம்,
புண்ணியங்கள் தலைக்கட்டிய புராணமிதில்,
புகல் கின்றார் சுகர் விட்டுவின் பூர்ணாவதாரங்கள்.

5. பாண்டவர்கள் பவுத்திரன் பரீக்ஷீத்து மன்னரென்பான்,
பண்புடன் தருமம் காத்துப் பாராண்ட காலை,
காட்டிலே வேட்டையாடிக் களைப்புற்று மதி மயங்கி,
கண்மூடிய முனி கழுத்தில் கட்டினான் செத்த பாம்பை.

6. ‘சமீகரா’ம் அம்முனியின் சக்திவாய்ந்த திருமகன்,
சர்ப்ப மெனச் சீறிச் சபித்தான் ஓர் சாபம்,
‘சர்ப்பத்தை அணிவித்து சத்குணம் நழுவிய மன்னன்,
சப்த தினத்தன்று சாவான் சர்பம் தக்ஷனால்’ என்று.

7. பாம்பினால் தன்னுயிர் பாழ் என வறிந்து,
பரீக்ஷித்து மன்னன் பாகீரதி நதிக்கரைக்கு ஏக,
எண்ணிலாத் தவயோகி யோர் இவனுக் கரணாய்ச் சூழ,
இசைத்தார் சுகப்பிரம்மம் இனிய பாகவதம் தனை.

8. வேதங்கள் முறைசெய்து வேரான பொருள் விளக்கியும்,
விளங்காக் குறையுணர்ந்த வேத வியாச முனிவர்,
நாரதர் உரை ஏற்று நலமந்தமில் நாரணன் பால்,
நவவித பக்தியை நவின்றதே நல்ல தோர் பாகவதம்.

## சுகர் உரை

9. ''கேட்ப்பாய் மன்னனே கேடழிக்க நீ விரும்பினால்,
கேசவனின் நலம் பயக்கும் பாகவதம் தனை,
அறிவாய் அரசனே அக்ஞானம் அகன்றிட,
அச்சுதன் அடிகளே அந்திமப் புகல்.''

10. ''ப்ரம்மதேஜஸ் விழைபவன் பூஜிப்பான் பிரம்மனை,
பேரழகியர் போகம் வேண்டுவான், வேண்டுவன் ஊர்வசியை,
வம்சங்கள் விழைபவன் வணங்குவன் பிரஜாபதியை,
வரையில் வைகுந்தம் வேண்டுவர் வேண்டிடுவர் விட்டுவையே''.

11. ''நாரணன் புகழ் கேளாச் செவிகள் நாகத்தின் புற்றே,
நற்றுழாயான் தாள் வணங்காத் தலை ஓர் சுமையே,
கார்வண்ணன் மூர்த்தம் காணாக் கண்கள் அந்தகமே,
கமல நாபன் கால் பற்றார் பாருலவும் பிணங்களே.''

12. ''வண்புகழ் நாரணன் வைத்த மா நிதியைப் பாடி,
தண்துழாய் தாமோதரன் தாளே எண்ணுவர்,
ஒன்றுவார் அவனுள் உயர் வீடு பெற்று,
ஒழிவில் காலமெல்லாம் ஒளிர் திருநாட்டில்'' என்றார் சுகர்.

## ஜய, விஜயர்கள்

13. காலத்தை வென்ற சனகாதியர் கண்கவர் குழந்தைகளாய்,
கருமுகில் நாரணன் கண்கவர் திருநாடு வந்திட,
குழவியர்க்கு இடமில்லை எனக் குறுமதி வாயிலோர் தடுக்க,
கொடுத்தனர் முனிவர் சாபம் குவலயத்தில் பிறந்திட.

14. ''மும்முறை அவ் வாயிலோராம் ஜய, விஜயர்,
மோகமிகுந்து அசுரராய் அவனியில் ஜனித்து,
மூவுலகும் நடுங்க ஆண்டு முகுந்தனையும் பழித்து,
முடிவில் அவன் முடிக்க முற்றுவர் வைகுந்தம்'' என்று.

15. ஆதியில் அசுரர் இரண்யாட்சனும், இரணியனுமாய்,
அதன் பின் ஆழி சூழ் இலங்கையர் கோனும் இளவலுமாய்,
அந்தியில் சிசு பாலனும் அகோர தந்த வக்ரனுமாய்,
அவனியுள் அரியை வெறுத்து அழிந்தனர் அவன் கையில்.

## இரணியகசிபு

16. ஆகாத காலத்தில் அடங்கா ஆசையில் திதி,
அருந்தவ கச்யபரை அந்தியில் கலக்க,
அசுர மைந்தர் இருவரை ஆண்டுகள் நூறு சுமந்து,
அவளும் ஈந்தாள் அமங்கலங்கள் அவனியில் வர.

17. முன்பிறந்த இரண்யாக்ஷன் மூர்க்கனாய்த் திரிந்து,
முடிவில் மாண்டான் மூலமூர்த்தி வராகனால்,
பின்பிறந்த இளவல் இரணிய கசிபுவும்,
பெரு வேள்விகள் சிதைத்துப் பேயாட்டமிட்டான்.

18. கோரமாய் அனல் மூட்டிக் கொடும் தவங்கள் செய்து,
குவலயத்தானின் வரம் பெற்ற அசுரனவன்,
'தேவனின் படைப்புகளால் மரணமிலை' என வரம் பெற்று,
திக் கெட்டும் வென்று தேவேந்திரனையும் வதைத்தான்.

19. மறைகளை மறுத்து மறை மூர்த்தியை வெறுத்து,
மங்கல நோன்புகளை மண்ணோடழித்து,
ஆனிரையோடு அந்தணரை அனலி லிட்டு,
அண்டருல கையும் தன் ஆளுகைக் கொண்டான்.

20. 'நாரணா' வென்று நவின்றோர் தம் நாக்கறுத்து,
நானிலத்து நல்லோரை நடுங்க வைத்து,
பூரணஸ்வரூபன் புள்ளூரும் விட்டு விற்கு,
புவனத்தில் பூசைகள் புறக்கணிக்க ஆணையிட்டான்.

21. விண்ணிடை வைகுந்தம் புக்கு விட்டுவைக் காணாது,
வெகுவாய் நகைத்து 'மருண்டான் மாதவன்' என்றான்.
'கருவிற்கும் கருவான கருணைக் கடலானைக்,
கருத்தினில் வையார் கண்ணில் காணார்' எனவறியான்.

22. காலம் கனிய கர்பமுற்றாள் அவனில்லாள் 'கத்யா',
கானகத்தே தவமீட்டி நின்றான் கள்ளரக்கன்,
வேதனையில் ஓடி ஒளிந்த ஒளியிழந்த இந்திரன்,
விரைந்திட்டுக் கவர்ந்தான் கருவுற்ற பெண்ணாளை.

23. இரணியன் சிசுவிற்கு எமனாக விழைந்த,
இமையவர் தலைவனை எதிர் கொண்ட நாரதர்,
'கருவிலே வளர் சிசு கமல நாப சாயியின்,
கருணை முற்றும் பெற்ற கண்மணி' என்றார்.

24. நடுங்கிய இந்திரன் நாரீமணியை விடுக்க,
நங்கையுடன் நகன்றார் நாரதர் தம் குடிலுக்கு,
நற்குணத் தாயும் நலம் கொள் கருவும் மகிழ,
நாள் தோறும் நாரணன் நாமங்கள் இசைத்தார்.

25. வல்லரக்கன் கொடுமையால் வாடி நின்ற உயிர்கள்,
வைய முண்டு மிழும் வள்ளலாரை வேண்ட,
'அஞ்ச வேண்டாம் ஆருயிர் பத்தரே, அரக்கனை
அழிப்பேன் அவன் மகன் பொருட்டே' என்றான்.

### பிரகலாதன்

26. இரணியன் அடைந்தான் ஈரிரண்டு மைந்தர்,
ஏற்றம் பெற்ற மைந்தன் இணையில் பிரகலாதன்,
கருவிலே கற்பகத் திருமால் காதை கேட்ட அவன்,
கண்ணும் கருத்தும் அக் கருமாணிக்கத்தில் ஆழ்த்தினான்.

27. பித்தனைப் போல் பேராயிரத்தானையே எண்ணி,
பிறப்பிலியின் திருநாமங்கள் பிழையற ஓதி,
பிரமனைப் படைத்து பேராழி துயில் சாயி ஏத்தி,
பிரகலாதன் மகிழ்ந்தான் பேரானந்தம் பெற்று.

28. ஆருயிர் மைந்தனை அன்றொரு நாள் அசுரன்,
ஆவி சோர அணைத்து அடிமடியில மர்த்தி,
தேனினும் இனிய மொழியால் தெய்வ மகனிடம்,
'தெரியுமோ தீதற்ற நல மெது வென' என்றான்.

**பிரகலாதன் பதில்**

29. ''விவேகமற்ற மாந்தருக்கு வீடே பாழ் கிணறு,
வீழ்ந்திடுவர் அதனுள் வெய்ய நரகமென அறியாது,
பாவையும் பணமும் பாசமாய் ஈர்க்கு முன்னே,
பாற்கடல் நாதனைப் பணிந்திடல் நலம்''.

30. ''தந்தையே கேட்பீர் ! தரணியாளும் கொற்றவ !
தரணிமுற்றும் நீர் சோதித்த தரங்க வண்ணன்,
தரங்க வெண் தடங் கடல் மறைத்த முத்தென,
தருக்குற்ற உம் மனதுள் தங்கியுளான் கரந்து' என்றான்.

**அசுரன் ஆணை**

31. சூதும் பகையும் கொண்ட தம் சுற்றத்தார்,
சூது செய்து தம் மகனைச் சொக்க வைத்தார் என,
சூதறியா மகனிடம் கண்ட சூதை விலக்க,
சொல்லில் வல்லாசிரியர் சொற்கேள அனுப்பினான் மகனை.

32. அசுர மன்னன் ஆணைக்கு அடங்கிய ஆசிரியர்,
அன்புடனும் பண்புடனும் ஆசை வார்த்தையிலும்,
ஆயகலைகள் அனைத்தும் அக் குழவிக்கு போதிக்க,
அவனோ பரந்தாமன் அடியொன்றே போற்றலுற்றான்.

33. ஆண்டுகள் உருள அரக்கன் மீண்டும் கேட்டான்,
'அறிந்தவற்றுள் உனக்குச் சிறந்தது' எது வென,
'எட்டெழுத்து நாதன் பால் எட்டு வித பக்தியே,
எவ்விதத்தும் கண்டதுள் ஏற்ற' தென்றான் பாலன்.

34. தாளா வேதனையுற்ற தக்ஷனின் பேரன்,
தவிக்கலுற்றான் வெந்தழலிட்ட புழுவென,
கூசாது தன் பகைவனைக் கும்பிடும் பாலகனை,
கொன்று தீர்க்க ஆணையிட்டான் கொடியோன்.

**பிரகலாதனுக்குச் சோதனைகள்**

35. பாலகன் பால் பாய்ச்சிய வேல்கள்,
பாவியின் நற்செயலென பலனற்றழிந்தன,
மதமிகுத்து மோத விட்ட மத்த கஜங்கள்
மாலையணிவித்து மங்கல வலம் வந்தன.

36. சீறவிட்டு ஏவிய நாகங்கள் செத்தன கருடனால்,
செந்தீயும் குளிர்ந்தது செங்கமலப் பூவாய்,
ஏவி விட்ட பேய்கள் ஏவியவரைத் தின்றன,
இடுகாட்டு பூதங்கள் இருகை கூப்பி வீழ்ந்தன.

37. ஆரா முலையமுது ஈந்து அணைத்த அன்னையையே,
ஆலகால விஷம் அளிக்க வைத்தான் அசுரன்,
ஆலகால முண்டவர்க்கும் ஆதியான ஆழியான்,
அச்சிறுவன் உயிரை அகமிருந்து காத்தான்.

**இரணியன் கேள்வி**

38. விரக்தியுற்று கோபமுற்ற வெஞ்சொல் அரக்கன்,
வினவினான் 'உனக்கு உறுதுணை எவன்' என,
'உனக்கும் உலகு பதினான்கிற்கும் உயிராம்
உரக சயனனே எனக்குறுதுணை' என்றான் பிள்ளை.

39. ‘ஆரடா உன் அரி ? அவனெங்கே இங்கு ?’ என,
ஆர்பரித்து அசுரன் அகன்ற வாள் வீச,
‘அறிவீர் தந்தையே ! ஆறுவது சினம் !’
‘அரியில்லாவிடம் இல்லை அண்டபகிரண்டத்தே’ என்றான்.

40. ‘‘துன்மதியாளனே ! தொலைப்பேன் உனை நான்,
தூணிலும் உள்ளானோ உன் துணை அரி’ என,
‘செப்புகிறேன் எந்தையே ! என் அரும் செங்கண் மால்,
செம் பொன் தூணிலும் சீராய் உளன்’ என்றான்.

நரசிம்ஹமர் அவதாரம்

41. எதிர் நின்ற தூணைக் கையால் இரணியன் இடிக்க,
இடிகளோர் கோடி இடித்ததோ வென,
அண்டமும் பகிரண்டமும் அதிர்ந்தன வாங்கு,
அத்தூண் பிளக்க நின்றான் அழகிய சிங்கன்.

42. ஏழுலகும் நடுங்கியது எழில் சிங்க நாதத்தே,
இமையவர் இற்றனர் எந்தையின் பிடரி சிலிர்ப்பில்,
பனிநீர்க் கங்கை சடையான் பரதம் நிறுத்த,
பதுமத்தான் சிலிர்த்தான் பரமனின் சீற்றத்தால்.

43. ‘‘நரனுமல்ல இது நாற்கால் ஜந்துவுமல்ல,
நரமும் சிங்கமும் நற்கலந்த உருவிதே,
கண்டிலேன் கேட்டிலேன் காணாக் கூத்திதை,
கடைமுடிவாய் யாரிது ?’ வெனக் கலங்கினான் அசுரன்.

44. நெடிய தோர் சிங்கமாய் நேமி கைக் கொண்டு,
நெற்றியில் முக்கண் நெருப்பெனச் சுடர் விட,
சிலிர்த்த பொன் பிடரி மயிர் செந்தழலாய்ச் ஜொலிக்க,
சிங்கப் பிரான் செய்தான் சிம்ம கர்ஜனை ஒன்று.

45. சுழற்றிய கதையுடன் சோர்வற்ற அரக்கன்,
சுந்தர சிம்மனைச் சுழற்றித் தாக்க,
‘அடித்த கை பிடிக்கும் பெருமாளாய்’
அரக்கனுடன் விளையாட்டாய் அரி மோதினார்.

46. அந்தியும் வர அரியும் ஆட்டம் நிறுத்த,
அசுரனை வளைத்து அடிமடியில் கிடத்தி,
நகங்களால் பிளந்து ‘நர நர’ வென கோஷித்து,
நாராய்க் குடலுருவி நற்றுழாய் என வணிந்தார்.

47. கொப்பளிக்கும் குருதியைக் குடமாய்ப் பரு ,
கோஷமிட்டார் வேஷதாரி விபு ஆங்கு,
பின்னிட்ட சடையானும் பிரமனும் தேவரும்,
கும்பிட்டு நடுங்கினர் கோர நாடகம் கண்டு.

48. நடுங்கிய லோகங்களும் நான்முக தேவனும்,
நாக பூஷணனும் நாரணன் நாச்சிமாரும்,
பிடரி சிலிர்த்த பிரானின் பேருக்ரகம் தணிக்கப்,
பிரஹ்லாதனைப் பணிக்கப் பிள்ளையும் வேண்டினான்.

**பிரஹ்லாதன்** துதி

49. "ஊழியில் கயலாய் உலகு காத்த தேவ சாந்தி
உத்தமர் கடல் கடைய உதவிய கூர்ம தேவ சாந்தி
நீரிலமுந்திய நிலமகள் மீட்ட நெடும் வராக தேவ சாந்தி
நெற்றியில் கண்ணுடை நிமல சிங்கவேளே சாந்தி
எழில் மிகு தத்தராய் இருந்த தேவ தேவ சாந்தி
குவலயத்தான் குமரனாராய் கோலமிட்ட தேவ சாந்தி
குறையில் துருவனுக்கு குறையாவருள் தந்த தேவ சாந்தி
நலிந்தோர்க்கு நல்லரணாய நாத நாதனே சாந்தி
நான்கு வேதம் ஓதி ஏத்தும் நாத ப்ரம்மமே சாந்தி
நிலமகள் கால் வருடக் கிடந்த நேமி நாதனே சாந்தி
நீள் விசும்பி அடியார்க்கு நேர்தியாய் அருள் தேவ சாந்தி
அலர்மகள் திருவடி அர்ச்சிக்கும் அரிய தேவ சாந்தி
அரவணைத்துயில் அருள் மா கடல் தேவ தேவனே சாந்தி
சினத்தினை ஒழித்தருள்வீர் சீரிய சிங்கமே
செய்வதறியேன் சிறியேன் செங்கண்மாலே சரண்."

நரசிம்ஹம**னைப்** போற்றுவோம்

50. ஓதி யொருக் காலும் உணரகிலா உன்னடி,
உன்னடியார்க் கென்றும் மங்கலச் சுடரடி,
சந்தியில் ஆளரியாய் வந்த சகதீச தேவ தேவ,
சாடுவம் சாவையாம் உன் சரணத்தாலே.

51. பிரம்மாதியர் தொழ நிற்கும் ப்ரஹ்லாத வரதனை,
பிறை தலை சூடிய பிநாக பாணியும்,
மந்திரங்கட்க்குத் தலையாம் துதி பன்னிரண்டால்,
"மந்திர ராஜ பத தோத்திரம்" மக்கட்க் கருளினார்.

52. முனிவர்களும் ஏத்த நிற்கும் முக்கண்ணப்பிரானை,
முடியில் மதி தரித்த முக்கண்ண சிவனார்,
முன்னின்று போற்றித் துதித்த மோகனம் கண்டு,
முடிவாய்ச் சடகோபர் விளித்தார் முக்கண்ணப்பா என்று.

53. பேரானந்தம் பெற்ற நம் பெரிய பெருமாள்,
பிராட்டியை மடியமர்த்தி மந்த ஹாஸமாய்,
ஆரா ஆமுத பானகமாம் அன்பர் துதி ஏற்க,
அழகிய சிங்கராய் அருளுகிறார் அஹோபலத்தே.

சமர்ப்பணம்

**அருள் நிதி ஆண்டவன் வேதாந்த ராமனுசன்,**
**அடியினை ஏற்றி அழகர் கோவிந்தகிருட்டினன்,**
**விரிசடை சிங்கப் பிரானை வேண்டிய பாடலிசைக்க**
**வில்லிபுத்தூர் சாயி ஈவான் விட்டு பக்தியே.**

❀

©
[Song composed by Thirukkudanthai Aandavan Thiruvadi, A.GOVINDAKRISHNAN, D 211 Kumara Dhara Block, National Games Village, Koramangala, Bangalore, 560047.